**செய்தி வெளியீடு எண்: 104** **நாள்: 12.02.2018**

புகழ் சொரியும் நீரூற்றாய், பொங்கி வரும் காவிரியாய், வறியவர்க்கு வசந்தத்தை வரவு வைக்க, வான் மழையாய்ப் பொழிந்து, நலிந்தோர்க்கும் நாளெல்லாம் உழைத்து, மெலிந்தோர்க்கும் வருங்காலம் சிறந்திடவே வந்துதித்து, நாடாளும் பேராற்றல் நல்லோர்க்கே உண்டென்று, பெருமைகளின் குன்றாகி, பேரொளியாய் நின்றவர். விழியசைவில் சாதனைகள், விரலசைவில் சரித்திரங்கள், வழியெங்கும் வாகைகள் வரிசைகட்டி வைத்தவர், தாயின் முகம் பார்த்து, தன் குறை சொல்லியழும், காய்ந்த பூமிக்கு பூரண ஒளியேற்றும் புண்ணியம். சாதனைத் தாயின் வருகைக்குப் பிறகே, சாமான்ய மக்களின் சாம்ராஜ்யத்திலும் சந்தோஷம் குடியேறியது என்றாக்கிய குலமகள். வரலாற்றுத் தமிழினத்தின்மீது வெள்ளி நிலா ஒளிவீச, விடியல் தந்த வெற்றித் திருமகள். அருள்கூர்ந்த திருக்கரத்தால் அள்ளித் தந்து, வரங்களை அள்ளித் தரும் தெய்வம் குடியிருக்கும் சன்னதிக்கும் திருப்பணிகள் நிகழ்த்திட்ட தெய்வத் திருமகள். இமைதுஞ்சா உழைப்பால், இந்திய அரசியலின் இணையற்ற அத்தியாயமான சரித்திரப் புத்தகம். தமிழகத்தின் இக்காலச் சரித்திரத்தை பொற்கரத்தால் புனைந்திட்ட சுந்தரவனத்து சந்திரோதயம். நடப்புக் கால அரசியலை சத்தியத்தால் சுத்திகரித்திட்ட, முழுநிலவாய் அவதரித்த முத்தமிழ். கலையுலகில் அவதரித்து, கருணை மழையாகி, ஈகையால் இம்மண்ணை பசுமை கொஞ்சும் இலை மயமாக்கிய இரக்கத்தின் உயிர் வடிவு. வாய்மையே வணங்கிப் பெற்ற வரமாக, தருமமே தவமிருந்து பெற்ற பரிசாக, அம்மா, அம்மா என்றே வேத மந்திரமாய் நாளும் ஓதும் நற்றமிழர் பூமிக்கு நடமாடும் தெய்வத் தாயாக வந்துதித்த காவியம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

எனக்காக ஏதுமில்லை, எல்லாமும் மக்களுக்கே என்று வாழ்ந்த பொன்மனத்து தாய், பொது வாழ்க்கை புனிதர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த எளிய தொண்டனுக்கு இரண்டாம் முறையாக பேரவைத் தலைவர் என்கிற மிகப் பெரிய கௌரவத்தை அளித்திட்டார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மக்களவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி அவர்களுக்கும், வாரியத் தலைவர்களுக்கும், மாண்புமிகு நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் பெருமக்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசு உயர் அதிகாரிகளுக்கும், பேரவைச் செயலாளர், சிறப்புச் செயலாளர் உள்ளிட்ட பேரவைச் செயலக அலுவலர்களுக்கும், குழுமியுள்ள ஏனைய அரசு அலுவலர்களுக்கும், பத்திரிகை, ஊடக நண்பர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1982 ஆம் ஆண்டில் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கி, சற்றொப்ப 21 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார்கள். பதினான்கு ஆண்டுகளுக்கும் மேலாக முதலமைச்சராக இந்த அவையில் வீற்றிருந்து, நல்லாட்சி நடத்தியிருக்கின்றார்கள். நான்காண்டு காலத்திற்கும் மேலாக மாநிலங்களவை உறுப்பினராகவும், ஐந்தாண்டு காலத்திற்கும் மேலாக சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியிருக்கிறார்கள். கலைமாமணி பட்டம் பெற்றவர். ஐந்து முறை டாக்டர் பட்டம் வழங்கி, சிறப்பிக்கப்பட்டவர். சர்வதேச மனிய உரிமை பாதுகாப்புக் குழுவினால் சிறந்த சேவைக்கான தங்கத் தாரகை விருது பெற்றவர். இந்த அவையில் பல்வேறு சரித்திர சாதனைகளை நிகழ்த்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள். தமிழகத்தை சீர்படுத்துவதில், செம்மைப்படுத்துவதில் தங்களுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்திட்ட தலைவர்கள் இருக்கின்ற இந்த மணிமண்டபத்தில், அந்தத் தலைவர்களுடைய வரிசையில், இறந்தும் இறவா புகழைப்

பெற்றுள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கிற வாய்ப்பை இன்றையதினம் நாம் பெற்றிருக்கிறோம்.

விபத்தில் நான் பாதிக்கப்பட்டபோது, எனக்கு உயிர் தந்ததோடு அல்லாமல், பொது வாழ்விலே எனக்குக் கிடைத்த அத்தனை உயர் பதவிகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே அளிக்கப்பட்டவை என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, நான் பட்ட கடன் அதிகம், பட்ட கடனுக்கு வட்டியும் கூட செலுத்தவில்லை இன்றுவரை நான். அம்மா, உங்கள் நினைப்பு வரும்போது, வழியும் என் கண்ணீரில் இருக்கின்ற உப்பெல்லாம், நீங்கள் கொடுத்த உயர்வினால் கண்ட உணவில் இருந்த உப்புதான் கண்ணீரோடு கலந்து கரைகிறது என்பேன். அது ஒன்றுதான் எனது நன்றிக்கடன் என்பேன். ஆனால், எத்தனை பிறவிகள் எடுத்தாலும் அதனையும் தாண்டி, நான் செலுத்த வேண்டிய நன்றிக் கடன் மீதம் இருக்கும் என்பேன்.

எனக்கிரண்டு தோட்டங்கள் உண்டு. பயிர் வளர்த்த தோட்டங்கள் அல்ல அவை, என்னுடைய உயிர் வளர்த்த தோட்டங்கள், என் வாழ்வில், உயர்வளித்த தோட்டங்கள். பாராமுகமாய் பலர் இருக்க, பாசத்தோடு எனை இறுகி அணைத்த பொன்மனத்துச் செம்மல், புரட்சித் தலைவர் குடியிருந்த கோயில், ராமாபுரம் தோட்டம், அரசியலில் எனக்கு அடையாளம் தந்திட்ட தோட்டம், என் உயர்வுக்கு அடிக்கல் நாட்டிய தோட்டம்.

நான் தேடிய தலைவியோ என்று அடையாளம் காட்டி, கொடுத்துச் சிவந்த கோமகன் போய்ச் சேர்ந்த பின்னே, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத வெள்ளை மனம், நல்ல மனம், தாயன்பு உள்ள மனம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடியிருந்த ஆலயம், போயஸ் தோட்டம், எனக்கு அபயமளித்த அடுத்த தோட்டம். வாழ்வில் உயர்வளித்து, உச்சத்தைத் தொட வைத்த, எங்கள் தெய்வம் குடியிருந்த தோட்டம்.

பள்ளத்திலே இருக்கிறவனைக் கைதூக்கி விடுபவர் எவரோ, அவர்தான் உலகத்திலேயே உயர்வானவர் என்றார் கௌதம புத்தர். அதுபோல, தாழ்ந்து கிடக்கிற மக்களை, கடைக்கோடியில் இருக்கக்கூடிய மக்களை, ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்களைக் கைதூக்கி, கரை சேர்த்து, சிம்மாசனத்திலே அமர்த்தி, சிகரங்களாக உயர்த்தியவர் நம் சமூக நீதி காத்த சரித்திரத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில், மிகப் பெரிய அங்கீகாரத்தை எனக்கு வழங்கியவர். ஒடுக்கப்பட்ட மக்களைக் கைதூக்கி விடுகிற மனப்பாங்கு, எண்ணம், ஈடுபாடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இயற்கையிலேயே அமையப்பெற்ற குணநலன்கள்.

பேரவைத் தலைவர் பொறுப்பில் நடுநிலை தவறாது பணியாற்றியுள்ளேன் என மாண்புமிகு அம்மா அவர்கள் 20—2—2016 ஆம் நாளன்று அளித்துள்ள அந்தப் பாராட்டு ஒன்றையே என் பேறாக, கிடைத்தற்கரிய வரமாக, என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பரிசாகக் கருதி வாழ்ந்தேன். பேரவைத் தலைவர் பதவியில் அமர்த்தப்பட்டபோது, யாருக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்து மகிழ்ந்தேன். 24—1—2017 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் இரங்கல் தீர்மானத்தின்மீது பேசும் வாய்ப்பு கிடைத்தபோது, யாருக்கும் கிடைக்கக்கூடாத வாய்ப்பைப் பெற்றமைக்காக வருந்தினேன். இன்றைக்கு என் சொல்வேன்? தெய்வமாகி நிற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் கட்டளை இதுவென்று எண்ணி, தாமரை இலை தண்ணீர்போல மாண்புமிகு அம்மா அவர்களின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகின்றேன்.

அன்பு காட்டுதல் சந்தோஷம், ஆசிர்வதித்தல் சந்தோஷம், இசையைக் கேட்டல் சந்தோஷம், ஈன்றெடுத்த மகவு சந்தோஷம், உச்சி முகர்வது சந்தோஷம், ஊஞ்சல் ஆடுவது சந்தோஷம்,

எண்ணப்படி நடப்பது சந்தோஷம், ஔவையின் மொழிகள் சந்தோஷம், கனவு காண்பது சந்தோஷம், காலைத் தென்றல் சந்தோஷம், கிராமத்து வாழ்க்கை சந்தோஷம், குளத்தில் குளிப்பது சந்தோஷம், கொட்டும் மழையும் சந்தோஷம், கோயில் வழிபாடு சந்தோஷம், இவ்வளவு சுகமான சந்தோஷங்களையும் ஒருங்கே தமிழர் பூமிக்கு அளித்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இன்றைக்கு இல்லாமல் செய்துவிட்டானே இறைவன். இறைவா, மாண்புமிகு அம்மா அவர்கள் இல்லாமல் இனி ஏதைய்யா எங்களுக்கு சந்தோஷம்.

அறியாத வயதில் தந்தையை இழந்து, அறியவரும் வயதில் தாயை இழந்து, சொல்லொணா துயரங்களைத் துய்த்து, எதிர்வந்த தடைக் கற்களைத் தகர்த்து, நாளெல்லாம் துயரங்களைச் சுமந்து, அனைவரும் வியக்கும் அயராத உழைப்பாலும், எல்லையில்லா வீரத்தாலும், மாற்றார் போற்றும் மதிநுட்பத்தாலும், அவணி போற்றுகின்ற அழியாத ஆற்றலாலும், ஈடு இணையில்லா தியாகத்தாலும், தனி ஒரு தலைவியாகப் போராடி, இமாலய வெற்றி பெற்று, உச்சத்தின் உச்சங்களைத் தொட்ட உலகத்து அதிசயம் அல்லவா மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

தடாகத்தைப் பற்றி நினைக்கும்போது, ஒரு தாமரை ''இதழ் விரித்து'' தன்னைக் காட்டுகிறது. விண்ணைப் பற்றி எண்ணினால் ''நிலவின் குளிர்முகம்'' தெரிகிறது. பொதுவுடமை பற்றிய சிந்தனைகள், கார்ல் மார்க்ஸை நினைவுபடுத்துகிறது. அகிம்சையைப் பற்றி எண்ணும்போது, மகாத்மா காந்தியின் குரல் ஒலிக்கிறது. வாரி வழங்கும் வள்ளல் தன்மை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.—அவர்களை அடையாளம் காட்டுகிறது. போர்க்குணமும், போராட்ட உணர்வும், நெஞ்சுறுதியும், துணிச்சலும், தளராத நம்பிக்கையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அல்லவா அடையாளம் காட்டும்.

ஈரம் மிகுந்த மனம், ஈகை சிறந்த குணம், வீரம் நிறைந்த உரம், வெற்றி குவிந்த கரம், எல்லாம் அறிந்தவர்தான் என்றாலும் அச்சமெனும் சொல்லை அறிந்ததில்லை, சோதனையில் இவர் என்றும் வீழ்ந்ததில்லை, முத்தமிழ் நாட்டு முதல்வராய் இருந்தோரில் பன்மொழிப் புலமைமிக்க பண்டிதை இவரேதான். தீமையைக் கிள்ளி எடுத்தவர் மட்டுமல்ல, நன்மையை அள்ளிக் கொடுத்தவர், தனியாற்றல் தலைவிக்கு நினைவாற்றல் நிறைய, இவர் பேச்சில் என்றும் மெல்லினம், செயல் வீச்சில் என்றும் வல்லினம். பேச்சும் செயலும் பெருமை மிக்க நல்லினம். பழமையை மதித்த தாய், புதுமையை போற்றும் தாய். அடுக்குமொழி இவர் பேச்சில் இருந்ததில்லை, அடுத்து இவர் ஒருவரையும் கெடுத்ததில்லை. எடுத்த செயல் எதிலும் தோற்றதுமில்லை. அச்சம் என்ற வார்த்தையை இவர் அறிந்ததில்லை. சொல்லிக்கொண்டே போகலாம், நேரமில்லை. இவர்தம் புகழுக்கு வானமே எல்லை.

உண்ணவும் நேரமில்லா உழைப்பு, உறங்கவே நினையாத விழிப்பு, தனக்காக ஏதுமின்றி தமிழர்க்காய் துடிப்பு, ஏறெடுத்துப் பார்க்கும் பார்வையும், ஏன் என்று கேட்கும் கேள்வியும், வாயிலிருந்து உதிரும் வார்த்தையும், வாளெடுத்து வீசும் வீச்சும், வானிடியாய் பேசும் பேச்சும், வளையாச் செங்கோலும், தாய்க்காக எதுவுமின்றி, எல்லாமுமே தமிழர்க்காகத்தானே. ஆம், தமிழர்தம் உயர்வுக்காகவே உழைத்தார்கள்.

அமுதூட்டும் செல்வச் செழிப்பில் உதித்து பள்ளி வளாகத்தில் பாடங்கள் அனைத்திலும் முதலிடமே வகித்து, கூர்மதியில் செழித்து, பேரறிவில் திளைத்து, கலைக் காவிரியாய் பொங்கி, புறமுதுகே காட்டாத போர்க்களங்கள் கண்டு, வரலாறும் வாய் பிளக்கும் வாகைகளை வரிசையாகக் கொண்டு, அதிசயமான அன்னை அல்லவா மாண்புமிகு அம்மா அவர்கள்.

"எனக்கென்று யாரும் கிடையாது. எனக்கு உறவுகள் இல்லை. எல்லாமும் நீங்கள்தான்" என்னும் சங்கல்பத்தோடு, நெருப்பை கிரீடமாய் நித்தம் நித்தம் சுமந்து, வெளிச்சத்தை வாழ்விக்க எண்ணெயாய், திரியாய் எரிந்த தீபம் மாண்புமிகு அம்மா அவர்கள். காவிரி தந்த கலைச்செல்வி,

மழைநீர் சேகரித்த புகழ்ச் செல்வி, உழவர்க்குப் புகழ் சேர்த்த தமிழ்ச்செல்வி. ஓசைகள் இல்லாமல் ஊருக்கு உழைத்த உறங்கா ஒளிவிளக்கு. நிலத்தில் யாருக்கும் அஞ்சாத துணிவு, மிகுந்த ஞானச்செருக்கு, அளவற்ற அறிவு. பாரெல்லாம் காக்கும் பராசக்தி அன்னையின் நெஞ்சார்ந்த கனிவு, சோதனைகளும் வேதனைகளும் சூறாவளியாய், சுனாமியாய் சுழன்றடித்த காலங்களில் சுருண்டுபோய்விடாமல், காவல் தெய்வமாய் காப்பாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். எதையும் எதிர்கொள்ளும் மனோபாவம்.

சோழநாடு காத்திட்ட சொக்கத் தங்கம் மாண்புமிகு அம்மா அவர்கள், தலைக்காவிரி மீட்டெடுத்த கலைக் காவிரி மாண்புமிகு அம்மா அவர்கள், உழவுத் தொழில் காத்திட்ட உயிரோவியம் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்தைக் காத்திட்ட தாயுருவ தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், வறட்சி தீர்த்து வாழ வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏழையெளிய மக்களுடைய வறுமையைப் போக்குவதற்கு அவர்கள் தீட்டிய திட்டங்கள் யாவும் அசாதாரணமானவை. சந்தனமாய்க் கரைந்து, சங்கத் தமிழ் பூமிக்கு சாதனைகளைக் குவித்து மறைந்துள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தாலும், கரிகாலன் கல்லணைக்கு காவிரி ஓடி வந்து கைகுலுக்கும் போதெல்லாம், கம்பீரத் தாயின் முகம் கழனியெங்கும் பயிரோடும், காவிரி நீரோடும் கலந்தே சிரிக்கும். முல்லைப் பெரியாற்று அணை நிரம்பி, முழு அளவு தொடும்போது மூவேந்தர் ஓர் உருவாம் முத்தமிழ்த் தாயின் முகம் தென் மாவட்டம் எங்கும் தேனாக இனிக்கும். கள்ளிப்பால் கொடுமை கண்முன்னே நிழலாடும் போதெல்லாம் அதற்குக் கொள்ளிவைத்த கருணைத் தாயின் முகம் கடவுளாகத் தெரியும். கலை உலகம், கனிம வளம் சுவாசிக்கும் சுதந்திரக் காற்று, புரட்சித் தாயின் பொற்காலத்துக்கு புகழ் மாலை சூட்டும். நெய்வேலிக்கே வேலி போட்டு தொழிலாளர் வாழ்வுக்கு நிம்மதி தந்த ஒப்பில்லா தாயை உழைப்பாளர் விடிவெள்ளி உளமார வாழ்த்தும். மிக்சி, கிரைண்டர், மின்விசிறி இல்லங்களில் இயங்கும் காலமெல்லாம், வீடுதோறும் விஞ்ஞானம் தந்த வெற்றித்திருமகளைப் போற்றிப் புகழும். மடிக்கணினி, மிதிவண்டி, மாணவர்க்கு சீருடை, காலணி, கல்வி உதவித் தொகை என கனிவோடு தந்த தாயை, ஈரிலையில் வாழுகின்ற இன்னொரு கலைமகளென்று இவ்வுலகம் போற்றும். யாராலும் மறக்க முடியாத தெய்வம், இன்று படமாய் மாறி, என்றென்றும் வழிகாட்டும் பாடமாய் நிற்கும் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும்போது, முதலமைச்சராக இருந்தாலும், ஓர் உறுப்பினர் என்ற முறையில், தான் ஆற்ற வேண்டிய கடமையை மிகச் சரியாக அவர்கள் ஆற்றினார்கள். அவர்கள் இந்த அவையில் நடந்து கொண்டது நமக்கெல்லாம் பாடம். சிறந்த முதலமைச்சரை, மிக உயர்ந்த செயல்பாடுடைய உறுப்பினரைப் பெற்றமைக்காக இந்தப் பேரவை நிச்சயமாகப் பெருமை கொள்கிறது என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழ் என்றென்றும், தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டம் மட்டுமல்ல, உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கும் என்கிற நம்பிக்கையை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நமக்கே தெரியாமல் உதவும் இதயத் துடிப்புகளாய் ஒவ்வொரு கணமும் நம்மைக் காத்து, உயிர்ப்பாக வைத்திருப்பவர். நம்மை வழிநடத்திச் செல்பவர். வாழ்க அம்மாவின் புகழ், வளர்க தமிழகம். மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில் நாளைய தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று வரலாறு படைப்போம் என உரைத்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**